# திருபாமாலை.

முதற்பாகம்.

---

"பீப்பிள்ஸ்வீக்கிலி," "மந்திலிரிவியூ"
என்னும் பத்திரிகைகளின் அதிபர்
கே. என். சிவராஜபிள்ளை, பி. ஏ.
இதன் பதிப்பாசிரியர்.

---

அந்த்ர பிரஸ்,
திருவனந்தபுரம்.

[விலை அணா 2. பைசா 6.]

# Preface.

This booklet is the first of the series which the un- ersigned intends editing and publishing, with a view supply a long-felt want for a book of Tamil verses hich will be suitable for purposes of memorising and ecitation in all Elementary Schools and the lower asses of the Secondary Schools in Southern India. s the veteran educationist, M. R. Ry Rao Bahadur Nagoji Rau Avl., B. A., retired Inspector of Schools, as truly observed in his *Manual of Method* the poetical works extant in Tamil will hardly meet the requirement on account of their highly ethical or imaginative cha- racter, which must certainly be beyond the ken of young minds. Short poems descriptive of the various aspects of Nature and written in a style simple and easily understandable will appeal to the urchins with greater force and vividness than the pieces from the ancient Tamil authors dealing with abstract questions of advanced ethics and couched morever in a diction classi- cal and highly wrought. Most of the fifteen pieces given in this,the first part of this new anthology, have been specially composed for this series by different authors.

Lessons I and XII, by the Editor.
II and X. by Pandit S. Muthuswami Pillai.
XI. by Mr. T. Lakshmana Pillai, B. A.
and the remaining pieces
by Mr. S. Desivinayakam Pillai.

If our educational authorities will see their way to prescribe this booklet as a Recitation text-book in schools the undersigned will feel encouraged to issue shortly further numbers of this series.

# சிறு பாமாலை.

## அட்டவணை.


| பாடம்] | | [பக்கம். |
|---|---|---|
| I. | கடவுள் வணக்கம். | 1. |
| II. | சோறூட்டல். | 2. |
| III. | வெண்ணிலா. | 2. |
| IV. | காலைப்பாட்டு. | 4. |
| V. | கடிகாரம். | 5. |
| VI. | பசு. | 7. |
| VII. | கடல். | 7. |
| VIII. | கைத்திறன். | 9. |
| IX. | பைசைக்கில் | 10. |
| X. | பண்டாரம். | 11. |
| XI. | செய்கடன். | 12. |
| XII. | புல்விறு. | 13. |
| XIII. | தாராவிளையாட்டு | 17. |
| XIV. | மலையும் அணிலும். | 20. |
| XV. | குருட்டு பையன். | 21. |

# சிறு பாமாலை.

## முதற்பாகம்.

### I. கடவுள் வணக்கம்,

[குறிப்பு:—யாவையும் படைத்துக் காப்பவர் கடவுள். அவரை வழிபடுவோருக்கே இகபரசுகமுண்டு, பாவம் செய்பவருக்கு மோக்ஷமில்லை, கடவுளை என்றும் வாழ்த்தி வணங்கவேண்டும்—என்னும் இக்கருத்துகள் எந்த மதத்தினரும் சம்மதிக்கக் கூடியனவகளேயாம். ஒவ்வொருதினமும் பள்ளிக்கூடப்பாடங்கள் தொடங்குமுன் எல்லாச்சிறுவர் சிறுமிகளும் ஒன்றாகச்சேர்ந்து இவ்வணக்கத்தைப் பாடலாம்.]

(நோட்டு)

தேவ! தேவனே!-மஹா-தேவ! தேவனே!
ஜெகமனைத்தும் படைத்தளிக்கும் தேவதேவனே.
(தேவ)

பாவம் செய்கிலோம்-பாவம்-செய்யில் உய்கிலோம்,
டரத்து மிகத்தும் வாழ்வை நம்பிப் பணிந்து போற்று
வோம். (தேவ)

வாய்மை நாடுவோம்-நும்-மகிமை பாடுவோம்,
வழுத்தற்கரிய தூயபாதம் வணங்கிச்சூடுவோம்.
(தேவ)

எங்கும் என்றும் நீர் தங்குகின்றவர்,
எங்கள் ஏழைப் பண்ணு மன்பாய் ஏற்றுக்கொள்வீரே.
(தேவ)

## II. சோறூட்டல்.

[ குறிப்பு:—"கண்ணே! சோற்றை உண்டுவிடுவாய். இல்லாவிடில் அதை பூனை வந்து கொண்டுபோய்விடும், காகம் வந்து கொண்டுபோய்விடும்" என்று பலவாறு சொல்லிச் சோறூட்டுவது தமிழ் மாதர்களின் வழக்கம்.]

கண்ணே! சோறுண்டிடாய், உண்டிடாய்.
காகம் வரும் பார்த்திடாய், பார்த்திடாய். (1)

பொன்னே! சோறுண்டிடாய், உண்டிடாய்.
பூனை வரும் பார்த்திடாய், பார்த்திடாய். (2)

குழந்தாய்! சோறுண்டிடாய், உண்டிடாய்.
குருவி வரும் பார்த்திடாய், பார்த்திடாய். (3)

தாயே! சோறுண்டிடாய், உண்டிடாய்.
தத்தை வரும் பார்த்திடாய், பார்த்திடாய். (4)

தேனே! சோறுண்டிடாய், உண்டிடாய்.
சேவல் வரும் பார்த்திடாய், பார்த்திடாய். (5)

---

## III. வெண்ணிலா.

[ குறிப்பு:—நித்திய அனுபவத்திலும், நூதன சாஸ்திரங்களிலும், புராணங்களிலும், காரணபரம்பரையான கதைகளிலுமிருந்து சந்திரனைப்பற்றி வெளியாகும் சிலவிஷயங்களைமட்டும் ஆதாரமாகக்கொண்டு இக்கண்ணிகள் எழுதப் பட்டிருக்கின்றன. இரவில் சந்திரனை நோக்கி ஒரு சிறு குழந்தை பின் வருமாறு சொல்வதாக எண்ணிக்கொள்ளவேண்டியது.]

(கண்ணி)

மீன்கள் கோடி கோடி சூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளி ஓடம் போல வரும் வெண்ணிலாவே! (1)

டானு வெங்கதிர் குளிக்கும் வெண்ணிலாவே! நித்தம்
பாற்கடலு மாடுவையோ? வெண்ணிலாவே! (2)

துன்பமிகத் தாமடைந்தும் வெண்ணிலாவே! பிறர்க்கு
சுகமளிப்பா ருன்போ லுண்டோ? வெண்ணிலாவே!(3)

ஆம்பல் முகம் மலரவரும் வெண்ணிலாவே! உனக்
கம்புஜம் செய்தீங்கெதுவோ? வெண்ணிலாவே! (4)

இருளதனை விழுங்கவல்ல வெண்ணிலாவே! உன்னை
இருள் விழுங்கும் சூழ்ச்சியெதோ? வெண்ணிலாவே!(5)

வளர்ந்து வளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடி வாடிப்போவதேனோ? வெண்ணிலாவே! (6)

கூகை யாந்தைபோல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூடு விட்டு வந்திடாயோ? வெண்ணிலாவே! (7)

பந்தடிப்போ முன்னையென்று வெண்ணிலாவே! நீதான்
பயந்து விண்ணிருந்தனையோ? வெண்ணிலாவே! (8)

பளிங்கு போலு முன்னுருவில் வெண்ணிலாவே! கறை
பற்றியேயிருப்பது மேன்? வெண்ணிலாவே.! (9)

பூமியினுருநிழலோ? வெண்ணிலாவே! அன்றி
பொருந்தும் முயற்கறையோ? வெண்ணிலாவே! (10)

குன்றும் குகைகளுமோ? வெண்ணிலாவே! அது
கூனக் கிழவிதானோ? வெண்ணிலாவே! (11)

ஆழியும்நீவரக்கண்டு வெண்ணிலாவே! குதித்
தாடுவதற்காரணமோ? வெண்ணிலாவே! (12)

ஆதாரம் ஒன்றிலாமல் வெண்ணிலாவே! நீயும்
அந்தரத்தில் நிற்பதெங்ஙன்? வெண்ணிலாவே! (13)

சுற்றித்திரிவதென்ன? வெண்ணிலாவே! உனக்குச்
சொந்த இடமும் இல்லையோ? வெண்ணிலாவே! (14)

அண்டிவாராய் நீயெனினும் வெண்ணிலாவே! இன்னும்
அகன்று நீ போய்விடாதே வெண்ணிலாவே! (15)

பறவைபோல் சிறகிருந்தால் வெண்ணிலாவே! யானுன்
பக்கம்வந்து சேருவேனே வெண்ணிலாவே! (16)

பால்போல் நிலவெறிக்கும் வெண்ணிலாவே! என்றன்
பாங்கில்விளையாடவாராய் வெண்ணிலாவே! (17)

பாங்கில்விளையாடவந்தால் வெண்ணிலாவே! நல்ல
பால்தருவேன் பழந்தருவேன் வெண்ணிலாவே! (18)

---

## IV. காலைப்பாட்டு.

[ குறிப்பு:—சகல பிராணிகளும் நித்திரை செய்யும் இராக்காலமானது நீங்கி விடியற்காலம் வரும்போது இயற்கையில் சிற்சில வேறுபாடான தோற்றங்கள் நிகழும். அவைகளைச் சுட்டிக்காட்டி "எல்லா உயிர்களும் விழித்துத் தத்தம் தொழிலைச்செய்யத்தொடங்கின; நீயும் துயில்விட்டு உனது வேலையை முடிக்க முயல்" என்று தன் குழந்தையிடம் ஒருதாய் கூறுவதாகச் செய்த செய்யுள் இது.]

அருணனுதித்தனன், அம்புஜம்விண்டது,
அளிகளும்மொய்த்தன பாராய்,
அம்மா! யெழுந்தோடி வாராய். (1)

பசியபுல்நுனியில் பதித்தவெண்முத்தமோ?
பனித்துளிதானோ? நீ பாராய்,
பைங்கிளி! எழுந்தோடி வாராய். (2)

"பொழுதுவிடிந்தது, பொற்கோழி கூவிற்று,"
பூஞ்செடி பொலிவதைப் பாராய்,
பொன்னே! எழுந்தோடிவாராய். (3)

"காகம் கரைந்தது, காலையுமாயிற்று,"
கனியுதிர் காவினைப்பாராய்,
கண்ணே! யெழுந்தோடிவாராய். (4)

---

## V, கடிகாரம்

[குறிப்பு;—கடிகாரம் வாங்கித்தரும்படி கேட்டுக்கொண்ட தன்மகளிடம் ஏழையான ஒருதாய் "மகளே! நேரத்தை அறிவதற்கு இயற்கையில் தானே அநேக லக்ஷியங்களிருக்கின்றன; அவையே நல்ல கடிகாரங்கள்; அவையிருக்க நமக்கு வேறு கடிகாரமும் வேண்டுமோ?" எனக்கூறுகின்றாள். இப்பாட்டின் முக்கிய கருத்து இயற்கையற்புதங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்பதேயாம். கடிகாரத்தின் உபயோகத்தைக் கண்டித்துச் சொல்வதன்று.]

(கும்மி)

சேவற் கோழியுண்டு, காகமுண்டு, வானம்
செக்கச்சிவந்து தெரிவதுண்டு,
மேவுபொன்னே! அதிகாலை தெரிந்திட
வேறும் கடிகாரம் வேண்டுமோடி? (1)

செங்கதிர் பொங்கிவருவதுண்டு, நல்ல
செந்தாமரைகள் மலர்வதுண்டு,
மங்கையே! காலைப்பொழுதை யுணர்ந்திட
மற்றும் கடிகாரம் வேண்டுமோடி? (2)

தன்னிழல் தன்னடியாவதுண்டு, சுடர்
தலைநேர்வந்து தெரிவதுண்டு,

இன்னமுதே!பகலுச்சியிதென்றிட
ஏதும் கடிகாரம் வேண்டுமோடி? (3)

விண்மணி யாழியில் வீழ்வதுண்டு, வாசம்
வீசுமந்தாரை மலர்வதுண்டு,
கண்மணியே! மாலைக்காலம் குறித்திடக்
கையில் கடிகாரம் வேண்டுமோடி? (4)

முல்லையரும்பு விரிவதுண்டாம் பின்
மொட்டுகள் மெல்ல அவிழ்வதுண்டு,
மெல்லியலே! மாலைவேளை யறிந்திட
மேலும் கடிகாரம் வேண்டுமோடி? (5)

அம்புலி நக்ஷத்திரங்களுண்டு, கணக்
காக்கியறிய வழிகளுண்டு,
இம்பரமுதே! ராநேர மறிந்திட
இன்னும் கடிகாரம் வேண்டுமோடி? (6)

கம்மெனவாசம் கமழ்பாரிசாதமிக்
காவில் மலர்ந்து சொரிவதுண்டு,
அம்மையே! நள்ளிரவிதென்று சொலவிட
ஆர்க்கும் கடிகாரம் வேண்டுமோடி? (7)

காலை மாலை எந்த வேளையும் சூரிய
காந்தி மலர் தானே காட்டிடாதோ?
வேலை யெழுந்ததிருவே! உனக்கினி
மேலும் கடிகாரம் வேண்டுமோடி? (8)

சுற்றுப்பொருளெலாம் உற்றுநோக்கிபவை
சுட்டும் மணிநேரங்கண்டறிவாய்,
பெற்றமுத்தே! யிந்தஉண்மையறிவோர்க்குப்
பின்னும் கடிகாரம் வேண்டுமோடி? (9)

---

## VI. பசு

[குறிப்பு:—பசு மிகவும் உபயோகமான ஒரு மிருகம். அதன் பெருமையை அதனிடத்திலேயே நம்மிலொருவர் கூறுவதாகச் செய்யப்பட்டுள்ளது இவ்வி.]

பச்சைப்புல்லைத்தின்று வெள்ளைப்
பால்தர நீயென்ன
பக்குவஞ்செய்வாய்? அதனைப்
பகருவையோ? பசுவே! (1)

உச்சியுடல் நக்கி யீன்ற
உடனுனது கன்றை
உயிரெழுப்பு மாயமெதோ?
உரைத்திடுவாய் பசுவே! (2)

வாய்க்கினிய பால் தருவாய்,
வயற்குரமும் தருவாய்,
வண்டி கட்டக்காளையும்நீ
வளர்த்தளிப்பாய் பசுவே! (3)

தாயில்லாப்பிள்ளைகட்குத்
தாயாவாய், நோயால்
தளர்பவர்க்கு மருத்துவச்சி
தானாவாய் பசுவே! (4)

## VII. கடல்.

[குறிப்பு;—கற்களும் பாறைகளும் அடர்ந்த கடற்கரை. கடல் கொந்தளிப்பாயிருக்கும் தருணம். அப்பொழுது அங்கு மணலில் விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தையொன்று கடலை நோக்கிக்கூறுகின்றது.]

எல்லையறியாப்பெருங்கடலே! நீதான்
இரவுமுறங்காயோ? கடலே!
அல்லும் பகலும் அலை கடலே! உனக்
களுப்புமிலையோ? கருங்கடலே! (1)

உருண்டு திரண்டு வரும் கடலே! உடைந்
தோடிப்போவதேன்? கடலே!
வெருண்டு மதிகெட்டாய் கடலே! பாறை
விலகிப்போகுமோ? கடலே! (2)

பொங்குதிரைகளோ? கடலே! அவை
புரவி நிரை தாமோ? கடலே!
எங்குமுனதொலியோ? கடலே! அன்றி
இடியின் முழக்கமோ? கடலே! (3)

ஓடமெடுத்தெறியும் கடலே! தயை
உனக்குச்சற்றிலையோ? கடலே!
ஆடல் வீடிதனைக்கடலே! நீயும்
அழிப்பதழகாமோ? கடலே! (4)

மலையை வயிற்றடக்கும் கடலே! எண்ணில்
மகாமீனுலவும் கடலே!
விலைகொள் முத்தளிக்கும் கடலே! சிப்பி
விளையாடற்குதவும் கடலே! (5)

மழைக்கு மூலமும் நீ கடலே! அதை
வாங்கிவைப்பதும் நீ கடலே!
வழக்கம் மகிமையெலாம் கடலே! எவர்
வழுத்தி முடிக்கவலார்? கடலே! (6)

## VIII. கைத்திறன்

[குறிப்பு;—கையினால் செய்யக்கூடிய வேலைகளை முற்றும் கணக்கிட்டெழுதுவது எவர்க்கும் எளிதல்ல. ஆதலால் முக்கியமானவை மட்டும் இங்கு எடுத்துக்கூறப்பட்டிருக்கின்றன. பாடும்பொழுது ஒவ்வொரு வேலை செய்யும் மாதிரியையும் அபிநயித்துக்காட்டவேண்டுவது மிக அவசியமாம்.]

(அபிநயப்பாட்டு)

வெயில்வரினும் மழைவரினும் விரிகுடையாம் கையே!
வியர்வைவரின் ஆற்றுசிறு விசிறியதாம் கையே!
துயிலவொரு மகவைத்தொட்டிலிட்டசைக்கும் கையே!
துரிதமுடன் எழுதவொரு தூவிகொளும் கையே!

இனிய செந்நெற்புல்முழுதற் கேர்பிடிக்கும் கையே!
இன்னிசைகள் எழுப்பவீணை ஏந்துமெழில் கையே!
கனியுதிர்ப்பக்கல்லெறியும் கவண்பிடிக்கும் கையே!
கண்களிக்கப் படமெழுதிக் காட்டுமென்றன் கையே!

தானதர்மம் செய்யவெதும் தளர்விலதாம் கையே!
தளர்பவரைக் கண்டுதலை தாங்கஎழும் கையே!
பானம்செயற் கேற்றவொரு பாத்திரமாம் கையே!
பையரவைப் போலவந்து பயமுறுத்தும் கையே!

மலரெடுத்து நல்லசெண்டு மாலைகட்டும் கையே!
வாய்க்கினிய பண்டமெல்லாம் வைத்துதவும் கையே!
ஜலத்திலோடம்விடுவதற்கு சலிப்பிலதாம் கையே!
தரையில்மோட்டார் றயில்நடத்தச் சமர்த்துளதாம்!
கையே!
கோபுரஞ்சேர்கோவிலொடு குடிசைகட்டும் கையே!
கூபதடாகங்களெல்லாம் குழித்துதவும் கையே!

ஆபரணம் பன்மணிகள் ஆய்ந்துசெயும் கையே!
ஆடைகள் பாவாடைகளும் ஆக்குமெழில் கையே!

மல்லயுத்தம் செய்யமுன்னே வந்துநிற்கும் கையே!
வாள்பிடித்து வகைவகையாய் மாமறுக்கும் கையே!
நெல்லைக்குத்தும் அரிசிதீட்டும் நெய்கொழிக்கும் கையே!
நேயரொடு பாண்டியாடி நிதம்ஜயிக்கும் கையே!

அழைப்பதற்கும் அகற்றுதற்கும் அபிநயிக்கும் கையே!
ஆக்குதற்கும் அழிப்பதற்கும் ஆற்றல்பெறும் கையே!
உழைப்பதற்கும் ஊட்டுதற்கும் ஊக்கமுறும் கையே!
உதவுதற்கும் ஏற்பதற்கும் உரிமைகொளும் கையே!

மக்களைத் தம் ஒக்கல்வைத்து வளர்த்திடுமென் கையே!
வர்ணமலர் தலைக்கணிந்து வாசமூட்டும் கையே!
தங்கபெரியோர்க்கு "ஸலாம்" தாமளிக்கும் கையே!
தரணியிலுன் திறமையெலாம் சாற்றவெளிதலவே.

---

## IX. பைஸைக்கில்

[ குறிப்பு;—கிராமாந்தரத்திலிருந்து வந்திருக்கும் தன் தமக்கைக்கு பட்டணத்திலிருக்கும் தம்பி ஒரு ஸைக்கில் போவதைக்காண்பித்து பின்வருமாறு சொல்லுகின்றான்.]

(நோட்டு)

தங்கையே! பார், தங்கையே! பார்,
ஸைக்கில் வண்டி யிதுவே பார்.

சிங்காரமான வண்டி,
சிலையிலே செய்தவண்டி. (தங்கை)

இரும்பாலே செய்தவண்டி,
எங்கெங்கும் ஓடும் வண்டி. (தங்கை)

மாடில்லை, குதிரையில்லை,
மாயமதாய்ப்பறந்திடும்பார். (தங்கை)

தீயில்லை, புகையுமில்லை,
தீவிரமாய்ச்சென்றிடும்பார். (தங்கை)

ஒன்றன்பின் னொன்றாக
உருளும்பை தாக்களைப்பார். (தங்கை)

அக்காளும் தங்கையும்போல்
அலை போகும் அழகைப்பார். (தங்கை)

காலாலே மிதிப்பதனால்
கடும்விசையில் போயிடும்பார். (தங்கை)

---

## X. பண்டாரம்

[குறிப்பு.— பிச்சையெடுக்க வரும் பண்டாரமும் சில முகமன் அமைந்த பாட்டுகளைப்பாடியே பிச்சையெடுக்கின்றான். ஒரு வீட்டில்வசிக்கும் மாதிடம் வந்த ஒரு பண்டாரம் 'ஒருபிடிஅரிசிதா, ஒருமுழக்கோற்றுணிதா' என்று இரக்கின்றான்.]

(குறள்வெண்செந்துறை.)

அம்மா! ஓர்பிடியரிசி, யாருமிலாப் பாவி
அலைந்துவந்தேன்வெகுதூரம், அங்கமெலாய்நொந்தேன்

இம்மாதம் முடியுமுனே, ஈசனருளாலே
எய்துமொரு நன்மையிங்கே, இலையே தாந்தடையே. (1)

தாயே! ஓர்முழக்கிறல் தருவை மனங்கனிந்தே
தள்ளாடும் உடல் மூடித் தணித்திடுவன் பணிப்பே;
நாயேன் பொய்மொழிவதில்லை, நாதனருளாலே
நலமருவும், குலம்பெருகும், நலிவுறு முன் துயரே. (2)

மக்களைப் பெற்றெடுத்த நல்ல மகராஜீ! நீயும்
வாழ்ந்திடுவை, மக்களெல்லாம் வளர்வர், சுகம்பெறுவர்,
பிற்கிளைக்குப் புண்ணியமும் பெருகும், பெரியம்மா
பேதை பயிரா, அன்னம் பெய்திடுவை பெரிதே. (3)

---

## XI. செய்கடன்

[ குறிப்பு:—'எப்பாடுபட்டும் செய்கடன் செய்தே தீரவேண்டும்' என்பதே பின் வரும் பாட்டின் கருத்தாம்.]

தன்சுகம் பாராது செய்கடன் செய்கவே,
தானே சுகம் வரும் செய்கடன் செய்கவே,
வன்சிறை தோன்றாது செய்கடன் செய்கவே,
வந்தது வருக நீ செய்கடன் செய்கவே. (1)

இயல்கின்ற மட்டிலும் செய்கடன் செய்கவே,
ஈசனும் குறைசொலார் செய்கடன் செய்கவே,
இயலாததும் பெறும் செய்கடன் செய்கவே,
ஈசன் இரங்குவார் செய்கடன் செய்கவே. (2)

இயற்கை துணைசெயும் செய்கடன் செய்கவே,
என்பயனென்னுதுநீ செய்கடன் செய்கவே,
செயற்கையின் குறியிது செய்கடன் செய்கவே,
இயற்கையின் கடனிது செய்கடன் செய்கவே. (3)

இயற்கையின் பங்குநாம் செய்கடன் செய்கவே,
யாருளை வருத்துவார் செய்கடன் செய்கவே,
இயற்கை தருமுடல் செய்கடன் செய்கவே,
இயற்கையே ஊட்டும்நீ செய்கடன் செய்கவே. (4)

கைகா லமைத்ததும் செய்கடன் செய்கவே,
காலம் அமைத்ததும் செய்கடன் செய்கவே,
மெய்வா யமைத்ததும் செய்கடன் செய்கவே,
மெய்யுயிர்க் கெல்லாம் சுகம்வந் தணையவே. (5)

---

## XII. புல்வீறு.

[குறிப்பு:—புல்லானது தன் பெருமையையும் தன் நிலைமையையும் எடுத்துச்சொல்லுகின்றது. சற்று ஆராய்ந்து பார்த்தால் இதில் கூறியுள்ள விஷயங்கள் அனைத்தும் சிறுவர் சிறுமிகள் எளிதில் அறியக்கூடியனவகளேயாம். மிகவும் அற்பமென எண்ணப்படுகிற புல்லும் உலகத்தில் வசிக்கும் உயிர்க்கோடிகளுக்கு பலவாறு உபகரிப்பது உண்மையே! இயற்கைப் பொருள்களின் குணவிசேஷங்கள் உற்றுநோக்கினல் மாத்திரமே அறியலாகும் என்பது இதினல் வெளிப்படும்.]

(குறள் வெண் செந்துறை.)

வயலிடையும் வருவென்,
அயல் வரம்பிடையும் வருவென்,
மலையிடையும் வருவென்,
மலைச்சாரலிலும் வருவென்,

கயலிடையும் குளத்திடையும்
கானிடையும் வருவேன்,
கல்லணிசேர் கரைகளுக்கோர்
நல்லணியாய் வருவேன். (1)

வீதியினும் வருவேன்,
பலவீட்டருகும் வருவேன்,
வேலியிடை வருவேன்,
வெறுஞ்சாலியிடைவருவேன்,
பாதையினும் வருவேன்,
நதிப்பாங்கரினும் வருவேன்,
பழமுதிரும் சோலையகம்
பழமைநண்ணி வருவேன். (2)

ஒலித்தோடும் ஓடையரு
கோடி விளையாடி
ஒளிமலரும் மலர்த் தடத்தில்
களிமலர்ந்து வருவேன்,
சலித்தோடு மனுடர் மனச்
சலிப்போடநிற்குந்
தருக்களின்மேற் பொருக்கிடையும்
தலைநீட்டிவருவேன். (3)

கற்பிளவு தனிலிருந்து
பொற்பவிழ வருவேன்,
கனம்பெருக்கும் கோவிலுக்கும்
ஜனஞ்சுருக்க வருவேன்,
மற்பொருதும் படைநுழையா
மதில் நுழைந்து வதிந்து
மற்றுதவியின்றி வெடிப்
புற்றுவிழச்செய்வேன். (4)

தீதியனும் கிரகணத்தின்
　　தழல் தீயும் வண்ணம்
தேமொழியார் கைட்புகுந்து
　　சிறுகலத்தும் புகுவென்,
வேதியர் காதிடைவருவென்,
　　வேள்வியினும் வருவென்,
மேலான பரம்பொருட்கும்
　　மேலாக வருவென். (5)

சேய்போல எனைவளர்த்தும்
　　சிலமதியிற் பெரியர்,
சிறியர் என்னைக்குறியாது
　　செருக்ககத்தினாலே
பேய்போல மிகச்சினந்து
　　பிடுங்கி எறிகின்றார்!
பேதைமையின் பெருக்கனைத்தும்
　　பேசவலார்யாரே? (6)

வானிருந்தும் பனித்திவலை
　　யான்பிடிப்பேன், கவலை
மாந்தர் மனமணுகாது
　　மகிழ் தருமோர் சாது,
தேனிருக்கும் பொழிலேயுந்
　　தேமலர்போல் எழிலே
தேக்கிநிற்பென் பூமடந்தை
　　திருமடந்தையாக. (7)

நானிலையேல் ஆடையொடு
　　நாணிழந்து மேலும்
நலமிழந்த கொடிப்போல
　　நிலமடந்தை நிற்பள்,

மேனிலையாம் எனைப்பொருந்தில்
            வழிபொருந்தும், வேறும்
வெம்புழுதி தனை இறுக்கி
            இன்புறவுஞ் செய்வென். (8)

மலருறையும் நான்முகவன்
            வகுத்தவயசின்றி
மறுவயசு யானளிப்பன்
            மண்ணினுக்கு நண்ணி,
அலருறையும் பாலையில்யான்
            உண்டாமை அன்றோ
அந்நிலமும் ஆழகவிந்து
            ஆளிறந்து நின்ற. (9)

புல்லெனப்புல்லிய அறிவால்
            பூதலத்தீர்! நீவிர்
புகழ்துடைத்தும் இசழ்குறித்தும்
            பூததயை ஒன்றால்
நல்லன தீயனவென்னும்
            நவில் பேதமின்றி
நாடுமுயிர் அடங்கலுக்கும்
            நானுணவளிப்பேன். (10)

---

# XIII.

## தாராவிளையாட்டு.

(மொழி பெயர்ப்பு)

[குறிப்பு—உத்ஸாகமும் சுறுசுறுப்புமுள்ள ஒரு குழந்தை 'தாய்த்தாரா' ஆகவும், மற்றக்குழந்தைகள் தாராக்குஞ்சுகளாகவும் பாவித்து நிற்கவேண்டும். பாடல்களை யெல்லாம் முன்னதாகவே கற்பித்துக் கொடுத்துவிடுவது நலமாயிருக்கும். விளையாட்டுத்தொடங்குமுன் குழந்தைகள் அவர்கள் இஷ்டம்போல நின்று கொண்டிருப்பதில் ஆக்ஷேபணை இல்லை. ஆனால் "தாய்த்தாரா" மட்டும் முன்னதாக வந்து தயாராக நிற்க வேண்டுவது அவசியம். உபாத்தியாயர் 'தொடங்கு' என்று கட்டளை கொடுத்த உடன் விளையாட்டுத் தொடங்கலாம்.]

### தாய்த்தாரா.

யானே 'தாய்த்தாரா' ஆவேன்.
இவையென் சிறிய குஞ்சுகளாம்.
குஞ்சுகளே! போய்ச்சுவாருகில்
கோணொருவரியாய் நில்லும்.

[குறிப்பு:—குழந்தைகள், தாராவைப்போல மெதுவாய் கூப்பிட்டுக்கொண்டு, மெல்ல மெல்ல அசைத்தசைத்து பள்ளிக்கூடச்சுவர்களின் அருகாக ஒவ்வொரு இடத்தை நோக்கிச் செல்லுகின்றன.]

### தாய்த்தாரா.

ஐயோ! என்ன பிள்ளைகள் நீர்?
அற்பமாவதொழுங்கிலையே!
உங்களைக்கொண் டென்செய்வேன்?
ஒரு நிமிஷம் நான் யோசிப்பேன்.

[குறிப்பு:—தாய்த்தாரா கொஞ்ச நேரம் ஆழ்ந்த யோசனை செய்துகொண்டிருப்பதாகப் பாவனை செய்கின்றது. குஞ்சுகளெல்லாம் அது என்ன சொல்லப்போகிறதென்று காத்து நிற்கின்றன. பிறகு தாய்த்தாரா பின்வருமாறு சொல்லத்தொடங்குகின்றது.]

நல்ல துங்கட் கொருபாடம்
நானறிவிப்பேன்; கவனியுங்கள்.
இடமும் வலமுமாய்க்காலை
இட்டடித் தூக்கி வையுங்கள்.
'ஒன்று', 'இரண்டு', 'மூன்றெ'ன நான்
உரைத்த உடனே தொடங்குங்கள்,

[குறிப்பு:—தாய்த்தாரா ஒன்று, இரண்டு, மூன்றென எண்ணுகின்றது. குஞ்சுகள் வகுப்பறையைச் சுற்றி அசைந்தசைந்து நடந்து செல்கின்றன. தாய்த்தாரா சற்று தூரம் அவற்றின் முன்னே போய்விட்டு, பிறகு மாறி நின்றுகொண்டு குஞ்சுகள் நடப்பதில் காணும் ஆக்ஷேபனைகளை யெல்லாம் எடுத்துக்காட்டி கண்டிக்கின்றது. பிள்ளைகள் நடக்கும் பொழுது தாராவைப்போல சத்தமிட்டுக்கொண்டே நடக்கவேண்டும்.]

## தாய்த்தாரா.

உதறிக்காலைப் புறம் வையுங்கள்;
உள்ளே வளைக்காதேயுங்கள்.
உடலைப்போக்கில் விட்டிடுங்கள்;
ஒன்றும் அதினால் கேடில்லை.
அங்கும் இங்கும் சாய்ந்தாடி
ஆடி ஆடி நடவுங்கள்.
மக்காள்! இங்கு வாருங்கள்,
வந்தின்னொருமுறை பாருங்கள்.
எது மிதனாலாம் வருத்தம்

இல்லை இல்லை வாருங்கள்.
நாளை நீங்கள் முற்றத்தில்
நன்றாய் நடக்க வேண்டாமோ?

[குறிப்பு:—தாய்த்தாரா 'ஒன்று' 'இரண்டு', 'ஒன்று' 'இரண்டு' என்று எண்ணிக்கொண்டிருக்க, குஞ்சுகள் பின்னும் ஒருமுறை சுற்றிநடக்க ஆரம்பிக்கின்றன.]

## குஞ்சுகள்

அம்மா! அன்புள எந்தாயே!
ஆசையுடனிப்பள்ளியிலே
பாடம் படிக்க, உன்கூடப்
பாடி ஆடி விளையாட
எங்கட் கெல்லாம் இஷ்டம் தான்
ஏதும் அதற்குத் தடையில்லை.
ஆனால் குளத்தில் நீந்துதல் தான்
அதிக ஸந்தோஷம் அலவோ?
சேற்றில் அங்கு புழுக்களையாம்
தேடித்தேடி முக்குளிப்போம்.
இஃனும் தாயே! நீந்துதலே
எங்கட் கெளிதாம். போவோம் வா.

[குறிப்பு —குஞ்சுகள் தாய்த்தாராவை சூழ்ந்து நிற்கின்றன.]

## தாய்த்தாரா.

நன்று வெயிலும் ஏறிற்று
நாமும் அவ்வாறே செய்வோம்.
இளைப்புக் கொஞ்சம் ஆறி வந்தே
இன்னும் ஓர் முறை முயல்வோமே,

[குறிப்பு:— தாய்த்தாராவின் பின் குஞ்சுகளெல்லாம் களிப்புடன் சத்த மிட்டுக்கொண்டு போகின்றன. போகும் பொழுது சில குஞ்சுகள் சிறகை அடித்துக்கொண்டு போகின்றன வெண்பறை பிள்ளைகள் கைகளை இருபுறமும் தட்டிக்காண்பிக்கவேண்டும்].

# XIV.

[ குறிப்பு:—உலகில் பெரியவரென்று செருக்கி மட்டித்தலும் சிறியவரென்று ஈனஞ் செய்தலும் ஆகா. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனி பெருமையும் பிரயோசனத்தைச் செய்யும் குணமும் உண்டு. இவ்வுண்மை ஓர் மலைக்கும் ஓர் அணிலுக்கும் உண்டான வாதத்தின் மூலமாக வெளியாக்கப்பட்டிருக்கின்றது.]

## மலையும் அணிலும்.

---

'அற்பத்திருடா' வென்றெனை அழைத்த
வெற்பே! யானும் விளம்பக் கேளாய்.
'அளக்கலாகா அளவும் பொருளும்
துளக்கலாகா நிலையும் தோற்றமும்
வறப்பினும் வளந்தருவண்மையு முனக்கென்
றுரைமொழி முற்று முண்மையே. ஆயின்
ஒருவகைப் பொருளினோருல காமோ?
ஒருவெயில்மழையி னுண்டொன்றுதேறுமோ?
பற்பல பொருளும் பற்பல பருவமும்
ஒன்றாய்க்கூடினே உலகாம், ஆண்டாம்.
ஆதலின் யானிவ்வகில மீதுதித்தே
இருப்பதை யிழுக்கா பெண்ணவு மாட்டேன்.
என்றொழிலியற்றவும் யாவர் வேறுளார்?
உன்பெரு முருவெனக்கில்லை. உனக்கும்
என்சிறு வடிவிலை; மேலும் என்றன்
உள்ளக்களிப்பில், உற்று நோக்கில்
எள்ளத்தனையு முனக்கிலை யிலையே.
அணிற்பிளை சாடி ஓடி அலைந்து
விளையாடற்கு விரிவிடம் பெறுவாய்;
ஐயமிதற்கிலை. அடலும், ஆற்றலும்

ஒவ்வொருவர்க்கு மொவ்வொரு விதமாம்.
அறத்தொடு முறையொடு மாழ்ந்த அறிவொடும்
அனைத்து மிவ்வுலகில் அமைக்கலாயின.
வனங்களை முதுகில் வகித்து நின்றிட
வல்லை நீயாயின், மற்றிங்கெனைப்போல்
நெல்லைக் கொறிக்க நின்னலாகுமோ?
யாவரே பெரியர்? யாவரே சிறியர்?
ஒன்றிற் பெரியர் ஒன்றிற் சிறியராம்,
ஒன்றிற் சிறியர் ஒன்றிற் பெரியராம்.
ஆதலின் அற்பர் ஆகாதவரென்
ஓதுதல் மடமையின் சாதனை அறிவாய்.

---

## XV.

[குறிப்பு:—கண் தெரியாததால் குருடர் மிக மனவருத்தமுடையவரா யிருப்பரென்று நாம் எண்ணுகின்றோம். ஆனால் பிறவிக் குருடர் பார்வை இன்னதென்று ஒருபொழுதும் அறியப் போவதில்லை யாதலின் அவர் கண்ணில்லாமையை ஒரு குறையாக எண்ணாது, பின்வரும் பாட்டிற் கூறியுள்ள குருட்டு வாலிபனைப்போல எண்ணவும் கூடும்.]

### குருட்டுப்பையன்.

---

(மொழிபெயர்ப்பு)

இப்பிறப்பிலெப்பொழுது மெனக்கறியமுடியா
திருக்குமொளியென்பதென்னை? யிருவிழியினடையும்
ஒப்பரிய நன்மைகளிக் கண்கெட்டசிறியேன்
உணரும்வண்ணம் உரைத்திடுவீர் உற்றஉறவீரே! (1)
அனுதினமும் கண்காணும் அற்புதங்கள் பேசி
அகங்களிப்பீர்; ஆதித்தன் ஜோதியமென்பீர்;

எனதளவில் வெம்மையெனத் தோற்றுமிவன் செயலால்
இரவு பகல் மாறிவரல் எங்ஙன்? அறியேனே! (2)

பாடிவிளையாடு பொழுதுறங்கு பொழுதல்லால்
பகற்பொழுதி ராப்பொழுதிப் பகுப்பெனக்குமுண்
டோ?
நாடியுணர்ந்திருக்க நிதம் கூடுமெனி லெனக்கிந்
நானிலத்திலோயாத பகலாகுமன்றோ? (3)

மை மட்டியும் வானமென்றும் வில்லென்றும் வர்ண
வகையென்றும் மனமகிழ்ந்து வனப்புரைகள் தருவீர்,
ஐவகையிப் பொறியிருக்க வேறு பொறியுறுமேல்
அறிபுலக மாகுமெலா மளவிடவுமெளிதோ? (4)

உலகிலெனக்குற்றபெரும் குறைநோக்கி நீவிர்
உளம்வருந்தல் பன்முறை நெட்டுயிர்ப் பொடுகேட்
டறிவேன்
அலகிறந்த பொறுமையகமிருக்க வொருநாளும்
அறியமுடியாதகுறை யனுபவிப்ப தரிதோ? (5)

ஒருநாளும் நீக்கமுடியாத குறைவந்தென்
உளத்திலெழும் பெருங்களிப்பையழித்திடலாகாதே;
வருபாடலி துவழுத்து பொழுதேழைக்குருட்டு
வாலிபனுயிருப்பினுமோர் மகாராஜன் யானே, (6)

---

Sundara Press.